| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

( New Syllabus )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை எழுதுக : 3 × 4 = 12

1. தமிழ் மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற் கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம் ?

2. செம்மொழியின் இலக்கணம் யாது ? அவ்விலக்கணம் தமிழ் மொழியின் பால் பொருந்தியிருப்பதனை நிறுவுக.

3. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் இக் கருத்தை திரு.வி.க. வழி நின்று ஆய்க.

[ Turn over

4. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை ?

5. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை தருக : $3 \times 4 = 12$

6. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

7. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை ?

8. 'இரந்தும் உயிர் வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

9. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை ?

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

III. **பின்வரும்** வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** (இருபது வரிகளின் மிகாது) விடை **எழுதுக** : $1 \times 6 = 6$

11. நம் தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களின் மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'ஆயா'* அல்லது *'வேலி'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'பால் வண்ணம் பிள்ளை' அல்லது 'மூக்கப் பிள்ளை விருந்து'* என்னும் சிறு கதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'ஒவ்வொரு கல்லாய்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

*அல்லது*

வரதட்சணைக் கொடுமையால் திருமணம் நின்றுபோன மகளுக்கு அவளது தாய் ஆறுதல் கூறுவது போல் கற்பனையாக ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுள்களைப் படித்துணர்ந்து, அவற்றில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துக் கூறுக. அப்பாடல்களில் அமைந்துள்ள எதுகை, மோனை, முரண், அணி, சந்தம், உவமை, உருவகம், ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டிக் காட்டுக. $1 \times 10 = 10$

1) "விண்ணிடை இரதம் ஊர்ந்து
மேதினி கலக்குதற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்தப்
பாரினை மயக்குதற்கும்
மண்ணிடை வாளை யேந்திப்
பகைப்புலம் மாய்ப் பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும் நிலை காண்ப தென்றோ ?

2) கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தண் கடல் நிகர்ந்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண் வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ ?

– பாவேந்தர் பாரதிதாசன்.

VI. பின் வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக.

$3 \times 2 = 6$

16. Money makes many things

17. Strike while the iron is hot

18. Tit for tat

19. To the good people world appears good

20. Well begun is half done

21. Untouchability is a sin.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து ( பத்து வரிகளில் ) எழுதுக. $1 \times 4 = 4$

அ) மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

ஆ) பதறிய செயல் சிதறிப் போகும்

இ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

*அல்லது*

'கடற்காட்சி' *அல்லது* 'காடின்றேல் நாடில்லை' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை (எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது) எழுதுக.

[ Turn over

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. $10 \times 1 = 10$

23. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. நெல்லி காய், தான்றி காய், கடுகாய், ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும்.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக )

25. ஆணை, ஆனை (அல்லது) உண், உன்

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

26. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது

( பிறமொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக).

27. கோளி முட்டை தாவரத்தில் உருண்டது

( கொச்சை வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக ).

28. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசிர்வதித்தேன்

( பிறமொழிச் சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக).

29. நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்

( தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக).

30. நீரின்றி நஞ்சையும் புஞ்சையும் விளையவில்லை

( மரபுப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

31. எங்கல் வீட்டிள் பூணை இருந்தது

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

32. கீட்ஸ் கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை என்றார்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).